1000

THE MODERN

# TAMIL FIRST READER

1000
T:21

# புதுமுறை
# தமிழ் முதற்பாடம்

10 MAR 1921
MADRAS



BY

**R. NARAYANASWAMI AYYAR,**

*Asst., Model School, Govt. Higher Ele. Training School,*

**SAIDAPET.**

...d. 1921 **Price 3 As.**

IB
031,6N
N21
171017

THE MODERN

# TAMIL FIRST READER

( PART I )

BY


R. NARAYANASWAMI AYYAR

*Asst. Model School, Govt. Higher Ele. Training School, Saidapet.*



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 MAR 1921
MADRAS.


---

# புதுமுறை
# தமிழ் முதற்பாடம்

(முதல் வகுப்பு.)


ஆர். நாராயணஸ்வாமி அய்யர்,

மாடல்ஸ்கூல் உபாத்தியாயர், கவர்ன்மென்ட் உயர்தர எலிமென்டரி டிரைனிங்ஸ்கூல், சைதாப்பேட்டை.



PUBLISHED BY

S. SAMBASIVA AYYAR,

*Tiruvalanthur, Mayavaram.*

ரிஜிஸ்தர் செய்தது]   1921   [விலை 3 அணா.

494-81186
1510

Printed by Messrs. Thompson & Co., at the "Minerva" Press,
33, Popham's Broadway, Madras.

To

**R. M. STATHAM, Esq., M. A., I. E. S.,**

DEPUTY DIRECTOR OF PUBLIC INSTRUCTION,

MADRAS.

OFFICE OF THE ... RAR OF ...
10 MAR 1921
MADRAS.



*This little book*
*is most respectfully dedicated,*
*with his kind permission.*

# PREFACE.

This Tamil First Reader is evidently the result of the author's practical experiences as a teacher of the young. The general plan of the book and the methods of teaching it are indicated by the author in the Introduction. The hints and suggestions for the consideration of teachers are well conceived; and they enunciate some main principles and their practical applications with none of the "fads and frills" of education.

The illustrations are, comparatively speaking, good, though it is to be conceded that Indian publishers have a considerable leeway to make up in this direction.

Names of familiar objects are given as exercises; and new letters catch the eye of the infants as they are printed in coloured type. The complexities in writing are explained and, I believe, the order in which the letters are taken up is an improvement on many other Readers I have seen. The practising ground of writing exercises is "level" and with sufficient drill, the children pass on to the "irregular" ground.

There is no one universal standard method of teaching; but there is a set of principles from which will be derived a number of methods, each perfectly adapted to the particular end which it is designed to serve; and, judged by that test, the successful attempts of a practical teacher of the young deserve encouragement and patronage at the hands of all those who are interested in the expansion and efficiency of Primary education in this Presidency.

SAIDAPET,
19*th Dec.* 1920.

**C. S. Sundaram Ayyar, B. A., L. T.,**
*Lecturer, Teachers' College, Saidapet.*

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 MAR 1921
MADRAS.

# கற்பிக்கும் முறை

பாலர்கள் ஏறக்குறைய எட்டாவது மாதம் முதல் வஸ்துக்களைப் பார்க்கவும், எடுக்கவும், சந்தோஷத்துடனும் வேடிக்கையுடனும், தாய் பாஷையில் அவைகளின் பெயரைச் சொல்லவும், பழக்கத்தை இயற்கையிலேயே அடைகிருர்கள். அதை மேன்மேலும் விருத்தி செய்வதும் அப்பெயர்களைப் பிள்ளைகள் தெளிவுடன் உச்சரிக்கவும், பேசும் வார்த்தைகளைச் சுலபமாய் எழுதவும், எழுதியவற்றைத் திருத்தமாய் வாசிக்கச் செய்வதுமே நமது கடமையாகும். அவ்விதம் தமிழ்ப் பாஷையைத் திருத்தமாயும் தெளிவாயும் எழுதப் படிக்க உயிரெழுத்து 12, மெய்யெழுத்து 18, உயிர்மெய்யெழுத்து 216, ஆய்தம் 1, வடமொழி எழுத்துக்களான ஜ- ஷ- ஸ- ஹ- க்ஷ இவைகள் சேர்ந்த எழுத்துக்கள், இவைகளையெல்லாம் போதிக்கவேண்டி யிருக்கின்றது. இவ்வெழுத்துக்களை நேர்கோட்டெழுத்துக்கள், நேர்கோடு வளைவுகோடு சம்பந்தமுள்ள எழுத்துக்கள், கீழ்ச்சுழி வளைவுகோடு ஸம்பந்தமுள்ள எழுத்துக்கள், மேல்சுழி வளைவுகோடு ஸம்பந்தமுள்ள எழுத்துக்கள் எனப்பிரிக்கலாம். அன்றியும், அகரமேறின உயிர்மெய்யெழுத்துக்கள் 18ஐ ட-ப - ம- ழ; ர- ச-க- த- ந- ற; ல- வ- ள- ன-ண- ஞ; ங- ய; அ, இம்முறையே முதலிற் கற்பிக்கப்பட்ட ஓர் எழுத்திலிருந்து மற்ளோர் எழுத்தைத் தொடர்ந்து சுலபமாய் எழுதவும், கற்பிக்கவும் தக்கவாறு பிரித்துக் கிரமப்படுத்தி இப்புத்தகத்தில் எழுதியுள்ளோம். மேற்சொன்னபடி வரிசைக் கிரமமாக முதலிற் கற்பிப்பதே சுலப வழியாகும் என்பது அனுபவத்தில் கண்ட விஷயம்.

## முதற் பக்கத்தைப் போதிக்கும் முறை :—

(1) முதல் பாடத்திலுள்ள படத்தைக் காண்பித்து இது ஒரு 'படம்' என்றும், வகுப்பிலுள்ள வேறு சில படங்களைக் காண்பித்து அவைகளும் ஒவ்வொன்றைக் குறிக்கும் ஒவ்வோர் படம் என்றும் பிள்ளைகளிடமிருந்தே வரவழைக்கவேண்டும்.

(2) பிறகு அவ்வார்த்தையைச் சரியானபடி உச்சரித்துக் காண்பித்தும் ப-ட-ம் என்று அசை பிரித்து எழுத்தெழுத்தாகச் சொல்லியும், சேர்த்துச் சொல்லியும், பின் சொல்லப் பழக்க வேண்டும்.

(3) ஒவ்வொரு பையனுக்கும் இரண்டு அங்குல நீளமுள்ள இரண்டு குச்சுகள் கொடுத்துக் கற்பலகையின்மேல் ஒரு குச்சை நேராக வைத்தும், மற்றொன்றை அதன் அடியில் படுக்க வைத்தும் (|__) ட-எழுத்தின் உருவத்தைப் பிள்ளைகளின் மனத்தில் பதியச் செய்தல் வேண்டும்.

(4) பலப்பத்தால் அதையொட்டி நேர்கோடும் படுக்கைக் கோடும் கிழிக்கச் செய்யவேண்டும்.

(5) இம்முறையே ப-ம என்ற எழுத்துக்களையும் குச்சுகளைக் கொண்டு படிப்படியாக-ட விலிருந்து ப வையும் (|_|)-ப- விலிருந்து ம வையும்(|_'_|)வைக்கச் செய்தும், குச்சுகளை யொட்டிக் கோடுகிழிக்கச் செய்தும், நன்ருக உச்சரிக்கச் செய்தும் பழக்க வேண்டும்.

(6) ஒவ்வொரு பையனுக்கும் ஒரு குன்று மணியைக் கொடுத்து -ம- என்னும் எழுத்தின்மேல் அதை வைக்கச்செய்து இந்த உருவம் -ம்- என்று சொல்லி அதை யொட்டி எழுதவும், தனியாக எழுதவும், உச்சரிக்கவும் செய்யவேண்டும். இம்மாதிரியே ட்- ப் என்னும் எழுத்துக்களையும் கற்பிக்க வேண்டும்.

2-வது பக்கமுதல் 19-வது பக்கம் வரையிலுள்ள பாடங்களைப் போதிக்குமுறை:—

(1) தயாரிக்கும் ஒவ்வொரு பதத்திலும் கற்பிக்கப்பட்ட எழுத்துக்களுடன் புதிய எழுத்து ஒன்றுதான் சேர்த்துப் போதிக்க வேண்டும்.

(2) அப்படிப் போதிக்கும் பதம் கூடுமானவரையில் சிறுவர்களின் பழக்கத்தில் பார்த்திருக்கும்படியான பொருள்களின் பெயராயிருத்தல் வேண்டும்.

(3) கூடுமானல் அப்பொருளை நேரில் காட்டுவது நலம்; இல்லாவிடில் கரும்பலகையில் சித்திரம் வரைந்து காட்ட வேண்டியது அவசியம்.

(4) கேள்விகளினால் அப்பொருளின் அல்லது அச்சித்திரத்தின் பெயரை வரவழைக்க வேண்டும்.

(5) அப்படி வருவித்த பதத்தை மாதிரி காட்டி நன்றாக உச்சரிக்கப் பழக்கவேண்டும்.

(6) எழுத்தெழுத்தாகப் பிரித்து உச்சரிக்கச்செய்து கரும்பலகையில் பழைய எழுத்துக்களை வெள்ளைச் சாக்கினாலும், புதிய எழுத்தை வர்ணச்சாக்கினாலும் எழுதிக் காண்பித்தல் வேண்டும்.

(7) படத்தைக்காட்டிப் பெயரைச் சொல்லச்செய்வதிலிருந்தும், அவ்வார்த்தையை எழுத்தெழுத்தாக அசைபிரித்துச் சொல்லி உச்சரிக்கச் செய்வதிலிருந்தும், வர்ணச்சாக்கினால் எழுதிய புதிய எழுத்தைக் கண்டறியச் செய்வதிலிருந்தும் அவ்வெழுத்தைத் தொனிக்கவும், சேர்த்து வாசிக்கவும் பிள்ளைகளுக்குத் தானாகவே பழக்கம் ஏற்பட்டு விடுகின்றது.

(8) புதிதாய்க் கற்பித்த உயிர்மெய்யெழுத்துடன் அதன் மெய்யெழுத்தையும் வார்த்தைகளில் அப்போதைக்கப்போது சம்பந்தப்படுத்தி மேற்சொன்ன முறையில் கற்பிக்க வேண்டும்.

(9) புதிதாய்க் கற்பித்த எழுத்தை எழுதும் மாதிரி முன்னால் கற்பிக்கப்பட்ட எழுத்தை அனுசரித்து அந்தந்தப் பாடத்தின் படத்தின் கீழ் வர்ண எழுத்தால் படிப்படியாய் விளக்கிக் காண்பிக்கப் பட்டிருக்கிறது. அதை எழுதுவதற்கு முன்னால், நேர்கோடு வரும் இடங்களில் குச்சுகளாலும், வளைவுகோடு வரும் இடங்களில் விதைகளாலும், கற்பலகையின்பேரில் வைத்துக்காண்பித்துப் பழக்கம் செய்தும், அதை யொட்டிப் பலப்பத்தால் கோடு கிழிக்கச் செய்தும், பிறகு தனிமையாக எழுதச்செய்தும் பழக்கவேண்டும்.

(10) அகரமேறின உயிர்மெய்யெழுத்துக்களை முன்னால் எழுதியுள்ள வரிசைக் கிரமத்தை அனுஸரித்து மேற்கண்ட முறைப்படி போதித்து, கடைசியாக மெய்யெழுத்து 18ஐயும், அகரமேறின உயிர்மெய்யெழுத்து 18ஐயும், 19-வது பக்கத்தில் காண்பித்திருப்பது போல வரிசைக்கிரமமாகச் சொல்லி, பிள்ளைகளும் வரிசைக் கிரமமாகச் சொல்லவும், எழுதவும், பதங்கள் மூலமாகச் சேர்த்துச் சொல்லவும் அப்பியாஸம் கொடுக்க வேண்டும்.

20-வது பக்கமுதல் 54-வது பக்கமுடிய போதிக்கும் முறை:—

(1) அ என்கிற உயிரெழுத்திலிருந்து ஆ என்கிற உயிரெழுத்தையும், ஆ ஏறின உயிர்மெய்யெழுத்துக்களையும், கற்பித்துவிட்டுப் பிறகு இ முதலிய மற்ற உயிரெழுத்துக்களையும், அவைகள் ஏறின உயிர் மெய்யெழுத்துக்களையும், வடமொழி எழுத்துக்களையும், வரிசைக் கிரமமாகக் கற்பிக்க முன் அனுஸரித்த ஒவ்வொரு முறையையும் சமயோசிதமாய்க் கையாட முயலவேண்டும்.

(2) ஆ ஏறின உயிர் மெய்யெழுத்துக்களைக் கற்பிப்பதில் 'ா' இந்த அடையாளமுள்ள எழுத்துக்களையும் '( )' இந்த அடையாளமுள்ள எழுத்துக்களையும் தனித்தனியாகப் பிரித்தும், இம்முறையே இ முதலிய மற்றப்பத்து உயிர்களுமேறியுண்டான உயிர்மெய்யெழுத்துக்களில் அவ்வவ்வடையாளங்களைப் பிரித்துக்கொண்டும் வரிசைக் கிரமமாகவும் போதிக்கவேண்டும்.

(3) அந்தந்த அடையாளங்கள் அமைந்த எழுத்துக்களுக்கு வகைக்கு ஒவ்வொரு மாதிரிப் பாடமும், அதைச் சார்ந்துள்ள பக்கத்தில் ஒவ்வொரு எழுத்துக்கும் கூடியவரையில் பழக்கத்திலுள்ள இரண்டொரு பதங்களும் சிலவாக்கியங்களும் மாதிரி காண்பிக்கப்பட்டிருக்கின்றன.

(4) அவைகளை உபயோகிக்கும்பொழுதே அ—ஆ ; கு—கூ ; எ—ஏ ; முதலிய எழுத்துக்களைக் குறுக்கியும், நீட்டியும், பதங்கள் மூலமாய்த் தொனித்து விளக்கிக் காண்பித்தல்வேண்டும். (உ-ம்) அவல்-ஆவல் ; குளம்—கூளம் ; எது—ஏது ; முதலியன.

[குறிப்பு:—முதற் பாடத்தில் மூன்று எழுத்துக்களைக் கற்பிக்கக் குச்சுகளால் மாதிரி காண்பித்திருப்பதுபோலவும், x-வது பக்கத்தில் மற்ற உயிரெழுத்துக்களையும் அகரமேறின உயிர்மெய்யெழுத்துக்களையும் குச்சுகள், விதைகள் மூலமாய் வைத்துக் காண்பித்திருப்பதுபோலவும், மற்றெல்லா உயிர்மெய்யெழுத்துக்களையும் குச்சுகள், விதைகள், முத்துக்கள், வளையங்கள், அட்டைத்துண்டுகள் முதலியவைகளால் மாதிரி காண்பித்துக் கற்பிக்கவேண்டும். அவ்வாறு கற்பிக்கப்பட்ட எழுத்துக்கள், பதங்கள், ஆகியவைகளைக்கொண்டு கணக்கு, சித்திரம், பொது அறிவு, கதை, விளையாட்டு, கவாத்து முதலிய இதர பாடங்களைச் சமயோசிதமாக ஆங்காங்கு பிள்ளைகளின் பழக்கத்தை

யனுசரித்து உபாத்தியாயர் யுக்தியாயும் சிறுவர்களுக்கு இலகுவா யிருக்கும்படியும் கற்பிக்க முயலவேண்டும். உதாரணமாக, முதல் பாடத்தில் ப-ட-ம் என்கிற எழுத்துக்களைக் குச்சுகளால் வைப்பதிலிருந்து கணக்குப்பாடம் 1 முதல் 5 வரையில் நான்கு சாதாரண விதிகள் கற்பிக்கலாம்; எழுத்துக்களின் வடிவம் போல் சித்திரம் வரைவிக்கலாம்; படத்தைப்பற்றி ஸம்பாஷித்து, பொதுஅறிவுப்பாடம் கற்பிக்கலாம்; படத்தைப்பற்றி சிறுகதை சொல்லலாம்; சொன்னகதையை நடிக்கச் செய்யலாம்; எழுத்துக்களின் வடிவம்போல் கவாத்து செய்யப் பிள்ளைகளை நிற்கவைக்கலாம். இம்மாதிரியாக எல்லாப்பாடங்களையும் வாசகப்பாடத்துடன் ஸம்பந்தப்படுத்த முயலவேண்டும்.]

இப்புத்தகத்தை நான் எழுதத்தொடங்குகையிலும், எழுதி வருகையிலும், தற்கால நூதன போதனா முறைக்குற்ற சில விஷயங்களை எனக்கு ஊக்கத்துடன் புகட்டிய எனது நண்பரும், சைதாப்பேட்டை போதனா முறைப் பாடசாலையின் மாடல்ஸ்கூல் ஹெட் மாஸ்டருமான ம-ா-ா-ஸ்ரீ, ஆர். வீரராகவையங்கார் அவர்களுக்கு என் வந்தனத்தையளிக்கின்றேன்.

இப்புத்தகம் அச்சிட்டு வெளியிடக் கூடாதவாறு பல மாதங்களாகக் குறுக்கிட்ட சில இடையூறுகளை மாற்றி, இதைப்பிரசுரிப்பதற்குத் தேவையான பொருளுதவி செய்தவரும், ஏழைகளுக்கு அன்னமளித்துக் காக்கும் வள்ளன்மையுள்ளவரும், எனது ஆப்த நண்பருமான, ஆண்டிப்பட்டி ஜமீன்தார் கனம் ஸ்ரீமான் S. RM. M. CT. பெத்தாச்சி செட்டியார் அவர்களுக்கு என் நன்றியறிதலை இதன் மூலமாய்ச் செலுத்துவதுமன்றி, சிறுவர்களின் வித்தியாபிவிருத்திக்குக் காரணமாகும் இப்புத்தகத்திற்கு அவர் புரிந்துள்ள பேருதவி, எனது ஆயுட்கால முழுதும் என்னால் மறக்கத்தக்கதல்ல,

சைதாப்பேட்டை
1-12-1920. } ஆர். நாராயணஸ்வாமி அய்யர்.

ட ப ம ழ

ர ச க த ந ற

ல வ ள ன ண ஞ

ய ங

அ ஆ இ ஈ

உ ஊ எ ஏ

ஐ ஒ ஓ ஔ

10 MAR 1921



படம்



| | | | |
|---|---|---|---|
| ட | ப | ம | ம் |

படம்



பட்டம்

ட ட் ட் ப ப் ப்

| | |
|---|---|
| படம் | மட்டம் |
| பட்டம் | டம்பம் |
| மடம் | பப்படம் |



OFFICE OF THE ... OF BO...
10 MAR 1921
MADRAS.

பழம்

ம ழ ழ ழ ழ்

| | | | |
|---|---|---|---|
| மழ | மழ | மட | மட |
| பட | பட | டம | டம |
| டப | டப | டம் | டம் |



மரம்

। ⌐ ர ர ர்

| | |
|---|---|
| ரப்பர் | படர் |
| ரம்பம் | பட்டர் |
| பம்பரம் | பர பர |

1. பழ மரம்.

2. ரப்பர் மரம்.



# சட்டம்

ர ர ச ச ச்ச

| | |
|---|---|
| சரம் | மச்சம் |
| சமம் | சர்மம் |
| சரசம் | சப்பரம் |

1. சர சர.
2. பழ ரசம்.
3. மரச் சட்டம்.



சக்கரம்

ச க க் க்க

| | |
|---|---|
| கட்டம் | கச்சம் |
| கம்பம் | கரகம் |
| கடகம் | பழக்கம் |
| கம்பர் | கட்டடம் |

1. கட கட.
2. கம கம.
3. கட்டடம் பக்கம்.
4. மரக் கம்பம்.



# பதக்கம்

க   த   த்   த்த

| | |
|---|---|
| பதர் | சத்தம் |
| ரதம் | தச்சர் |
| பதம் | தகரம் |
| மதம் | தம்பட்டம் |

1. ரதச் சக்கரம்.
2. தச்சர் ரம்பம்.
3. பத்தர் பதக்கம்.
4. கட்டடப் பதக்கம்.



நகம்

ா ந ந ந் ந்ந

| | |
|---|---|
| நகர் | தந்தம் |
| நகரம் | நம்பர் |
| நத்தம் | கந்தகம் |
| நரகம் | தந்நகரம் |

1. நட நட.
2. தந்த ரதம்.
3. கந்தகம் சரசம்.
4. நகர்ந்த சப்பரம்.



# பறந்த பட்டம்

ா ற ற் ற்ற

| | |
|---|---|
| மற | பறந்த |
| கற | மறந்த |
| மற்ற | மறக்க |
| கற்ற | பறக்க |

1. கற்ற பதம்.
2. மற்ற படம்.
3. மறந்த நம்பர்.
4. பறந்த பட்டம்.



# கப்பல்

ல ல ல் ல்ல

| | |
|---|---|
| பல் | பகல் |
| கல் | கலம் |
| மடல் | கந்தல் |
| கடல் | பந்தல் |

1. கடல் சப்தம்.
2. கல் பதக்கம்.
3. நல்ல பழக்கம்.
4. தந்தப் பல்.




கவர்

ெ ஃ வ வ் வ்வ

| | |
|---|---|
| வடம் | கவ்வல் |
| பவழம் | தவழ்தல் |
| வட்டம் | நவம்பர் |
| வற்றல் | வர்த்தகம் |

1. வந்த கவர்.
2. நல்ல பவழம்.
3. நல்ல வழக்கம்.
4. கப்பல் வர்த்தகம்.



# மத்தளம்

ெ ள ள ள் ள்ள

| | |
|---|---|
| பள்ளம் | மக்கள் |
| பள்ளர் | கள்ளர் |
| பற்கள் | கம்பளம் |
| கற்கள் | சம்பளம் |

1. நல்ல கம்பளம்.
2. மத்தள சப்தம்.
3. வளர்ந்த மரம்.
4. தந்தப் பற்கள்.



சந்தனம்

ெ ன ன ன ன் ன்ன

| | |
|---|---|
| மகன் | தச்சன் |
| கடன் | நந்தன் |
| மனம் | கன்னம் |
| கவனம் | கவர்னர் |

1. சந்தன மரம்.
2. மன்னன் தர்மம்.
3. தச்சன் ரம்பம்.
4. கப்பல் கனம்.



கண்

ண ணை ண ணா ண் ண்ண

| | |
|---|---|
| கண் | கணவன் |
| மண் | கண்ணன் |
| மணம் | லண்டன் |
| தணல் | பட்டணம் |

1. பல வர்ணம்.
2. கடல் மணல்.
3. நல்ல பண்டம்.
4. சந்தனம் மணம்.



# மஞ்சள்

ெ எ ஞ ஞ் ஞ்ச

| | |
|---|---|
| மஞ்சம் | பஞ்சரம் |
| கஞ்சம் | வஞ்சகம் |
| பஞ்சம் | சஞ்சலம் |
| லஞ்சம் | பஞ்சமர் |

1. மஞ்சள் வர்ணம்.
2. மஞ்சள் சந்தனம்.
3. கஞ்சம் பட்டணம்.
4. மனம் சஞ்சலம்.



கங்கணம்

ர ங ங ங் ங்க

| | |
|---|---|
| தங்கள் | லவங்கம் |
| ரங்கன் | கலங்கல் |
| மங்கல் | சங்கரன் |
| சங்கம் | சங்கடம் |

1. தங்க ரதம்.
2. கண் மங்கல்.
3. பழ மரங்கள்.
4. தங்கக் கம்மல்.



கலயம்

ι ıı ıட ய ய்

| | |
|---|---|
| வயல் | பயணம் |
| யமன் | சயனம் |
| சதயம் | மயக்கம் |
| கடயம் | பந்தயம் |

1. மண் கலயம்.
2. கள்ளர் பயம்.
3. சவரன் நயம்.
4. வயல் களம்.



## அரம்

ஒ ஒ ௮ அ

| | |
|---|---|
| அப்பம் | அச்சம் |
| அத்தர் | அகலம் |
| அன்னம் | அவசரம் |
| அரசர் | அம்பட்டன் |

1. அரச மரம்.
2. தச்சன் அரம்.
3. பயணம் அவசரம்.
4. அகப்பட்ட தடயம்.

உயிரெழுத்து.

# அ

மெய்யெழுத்துக்கள்.

க் ங் ச் ஞ் ட் ண்

த் ந் ப் ம் ய் ர்

ல் வ் ழ் ள் ற் ன்

---

அகரமேறின உயிர்மெய்யெழுத்துக்கள்.

க ங ச ஞ ட ண

த ந ப ம ய ர

ல வ ழ ள ற ன

| ஆ |
|---|
| ா (15) |
| கா |
| ஙா |
| சா |
| ஞா |
| டா |
| தா |
| நா |
| பா |
| மா |
| யா |
| ரா |
| லா |
| வா |
| ழா |
| ளா |
| ா (3) |
| ணா |
| றா |
| னா |



ஆலமரம்



கால்




அணா

| | | |
|---|---|---|
| ஆலம்பழம் | காலணா | ராமர் |
| ஆலயம் | வண்ணான் | ராகம் |
| காகம் | தாளம் | லாடம் |
| அக்கா | தாதா | பலாமரம் |
| ஙா | நாய் | வாய் |
| சால் | நார் | வால் |
| சாண் | பாய் | பாழான |
| ஞானம் | பாலம் | களாக்காய் |
| ஞாபகம் | மாமரம் | கறார் |
| கடா | அம்மா | நன்றாய் |
| பட்டாளம் | தாயார் | கன்னான் |
| தடாகம் | ஆயாள் | கனா |

1. அண்ணா! நல்ல கனா.
2. அம்மா! மாமா தபால்.
3. அப்பா! காலணா தா.
4. மாமா! பழம் தா.
5. தாதா! பழம் பார்.
6. அக்கா! கன்னான் வந்தான்.



இரதம்.



கத்தி



கிளி



வண்டி

இ

ி (3)
கி
சி
தி

ி (14)
ஙி
ஞி
ணி
நி
பி
மி
யி
ரி
லி
வி
ழி
ளி
றி
னி

ி (1)
டி

| | | |
|---|---|---|
| இதழ் | சந்திரன் | பல்லி |
| இளும் | சிலந்தி | நாற்காலி |
| கிண்ணம் | நிலா | விரல் |
| கிழவன் | நிழல் | சாவி |
| ஙி | பின்னல் | கழி |
| இஞ்சி | பின்கால் | மார்கழி |
| கஞ்சி | மிட்டாய் | களிமண் |
| ஞி | மிளகாய் | கள்ளி |
| சட்டி | ரயில் | விசிறி |
| கண்ணாடி | தயிர் | கறிகாய் |
| அணில் | அரிசி | பனி |
| ஆணி | அரிவாள் | ஆனி |

1. கண் வலி.
2. சிவந்த மிளகாய்.
3. ஆள் காட்டி விரல்.
4. கால் படி அரிசி தா.
5. இரண்டாம் பக்கம் படி.
6. மார்கழி மாதம் பனி அதிகம்.



ஈ



கீரி



மீன்

ஈ

ி (3)

கி சி தி

ீ (15)

ஙீ ஞீ டீ ணீ நீ பீ மீ யீ ரீ லீ வீ ழீ ளீ றீ னீ

| | | |
|---|---|---|
| ஈச்சமரம் | தீபம் | கிரீடம் |
| ஈயம் | தீபாவளி | சிலீர் |
| கீல் | தீனி | லீலாவதி |
| கீறல் | இளநீர் | வீதி |
| ஙீ | நீளம் | வீக்கம் |
| சீயக்காய் | நீலம் | வீரன் |
| சீவல் | பீங்கான் | ழீ |
| ஞீ | பீரங்கி | பளீர் |
| திடீர் | மீதி | பார்க்கிறீர் |
| கண்டீர் | சமீபம் | கற்றீர் |
| தண்ணீர் | மதியீனம் | பன்னீர் |
| கண்ணீர் | சரீரம் | சனீச்வரன் |

1. ஈர மண்.
2. நீல வர்ணம்.
3. மாட வீதி.
4. மீன் சிதள்.
5. தம்பீ! பாடம் படி
6. பாலில் தண்ணீர் அதிகம்.



உரல்



முறம்



பசு

| |
|---|
| உ |
| ு (5) கு மு ரு ழு ளு |
| ு (5) ஞு சு பு யு வு |

| | | |
|---|---|---|
| உளி | பந்து | கல்லுரல் |
| உரி | வாத்து | கடலுப்பு |
| உமி | காது | அலுவல் |
| குல்லாய் | நுகத்தடி | பவுன் |
| குரங்கு | நுணுமரம் | கடவுள் |
| குளம் | நுனி | சவுக்கு |
| ஙு | பாம்பு | கழுகு |
| சுவர் | பிரம்பு | அழுத்தம் |
| தராசு | சீப்பு | அழுகல் |
| சுத்தி | முகம் | கள்ளு |
| டு | முழம் | வள்ளுவன் |
| வீடு | முயல் | கிள்ளுதல் |
| மாடு | ஆயுதம் | ஆறு |
| நண்டு | யுத்தம் | ஞாயிறு |
| சீட்டு | வாயு | காற்று |
| கணு | குருவி | புனுகு |
| அணுக்கள் | பருத்தி | மின்னுதல் |
| ராணுவம் | ருசி | தின்னுதல் |



கிணறு

| |
|---|
| ு (7) |
| ஙு |
| ஞு |
| து |
| நு |
| லு |
| று |
| னு |



ஆடு

| |
|---|
| ு (1) |
| டு |

1. மர உரல்.
2. மா வடு.
3. மாம் பிஞ்சு.
4. நுணா மரம்.
5. விறகு கட்டு.
6. சிவப்புப் பசு.
7. கல் முற்றம்.
8. உளுத்தம் பருப்பு.
9. காற்று வீசுகிறது.
10. ஆடு சாதுவானது.
11. பசு புல் தின்னும்.
12. பால் ருசி உள்ளது.
13. நாய் நன்றி உள்ளது.
14. பத்தும் ஆறும் பதினாறு.
15. கரும்புக்குக் கணுக்கள் உண்டு.
16. குரங்கு மரத்துக்கு மரம் தாவும்.



ஊஞ்சல்



கூண்டு



தூண்

| |
|---|
| ஊ |
| ூ (1) கூ |
| ூ (7) ஞூ ணூ தூ நூ லூ றூ னூ |

| | | |
|---|---|---|
| ஊஞ்சல் | தூண் | ரூபாய் |
| ஊசி | தூபம் | ரூல்தடி |
| ஊதல் | தூக்கம் | கரூர் |
| கூடு | தூசி | வல்லூறு |
| கூடம் | நூல் | கல்லூரி |
| கூடாரம் | நூறு | பாலூர் |
| ஞூ | நூதனம் | தஞ்சாவூர் |
| சூரியன் | பூட்டு | மணவூர் |
| சூரன் | பூரான் | ழூ |
| மசூதி | பூமி | உள்ளூர் |
| வசூல் | பூண்டு | திருவள்ளூர் |
| டூ | மூக்கு | ஆற்றூர் |
| குண்டூசி | மூன்று | கற்றூண் |
| குண்டூர் | மூங்கில் | நானூறு |
| பாண்டூர் | யூகம் | கண்ணனூர் |
| பூணூல் | மாயூரம் | நன்னூல் |



பூட்டு

ூ (4)
ஞூ
பூ
யூ
வூ



சூரியன்

ூ (1)
சூ



குண்டூசி

ூ (1)
டூ



மூக்கு

ூ (4)
மூ
ரூ
ழூ
ளூ

1. ஊசி நூல்.
2. தூப தீபம்.
3. ஊஞ்சல் ஆட்டம்.
4. கூனல் முதுகு.
5. கல்லியாணக் கூடம்.
6. பட்சிக் கூடு.
7. இரும்புப் பூட்டு.
8. பாக்குத் தூள்.
9. அஞ்ஞூ ரூபாய் தந்தார்.
10. ரூபாய் வட்டமாய் இருக்கும்.
11. பத்தும் பத்தும் இருபது.
12. மூன்று பத்து முப்பது.
13. பத்து பத்து நூறு.
14. சூரியன் பிரகாசம் தரும்.
15. அம்மா! கூழ் வார்.
16. கூழாயினும் குளித்துக் குடி.



எலி



செடி

| எ |
| --- |
| ெ (18) |
| கெ |
| ஙெ |
| செ |
| ஞெ |
| டெ |
| ணெ |
| தெ |
| நெ |
| பெ |
| மெ |
| யெ |
| ரெ |
| லெ |
| வெ |
| ழெ |
| ளெ |
| றெ |
| னெ |

| | | |
|---|---|---|
| எறும்பு | தெப்பம் | ரெட்டியார் |
| எருது | தெய்வம் | கலெக்டர் |
| எட்டு | தெற்கு | வெல்லம் |
| கெடிகாரம் | நெல் | வெள்ளி |
| கெம்பு | நெய் | வெண்ணெய் |
| கெட்டி | நெருப்பு | வெந்தயம் |
| ஙெ | நெற்றி | அகழெலி |
| செக்கு | பெட்டி | வெள்ளெலி |
| செவ்வாய் | பெண் | சிற்றெறும்பு |
| ஞெ | மெட்டி | குற்றெழுத்து |
| சுண்டெலி | மெழுகு | பதினெட்டு |
| எண்ணெய் | யெ | முன்னெற்றி |

1. அச்சு வெல்லம்.
2, நெல்லி மரம்.
3. பத்தும் எட்டும் பதினெட்டு.
4. கெடிகாரம் மணி காட்டும்.
5. எறும்புகளில் பலவிதம் உண்டு.
6. சிற்றெறும்பு,வெள்ளெறும்பு, கட்டெறும்பு.



ஏணி



தேங்காய்

| ஏ |
| --- |
| ே (18) |
| கே |
| ஙே |
| சே |
| ஞே |
| டே |
| ணே |
| தே |
| நே |
| பே |
| மே |
| யே |
| ரே |
| லே |
| வே |
| ழே |
| ளே |
| றே |
| னே |

| | | |
|---|---|---|
| ஏற்றம் | தேங்காய் | நூலேணி |
| ஏரி | தேன் | இலேகியம் |
| ஏழு | தேள் | இலேசு |
| கேணி | நேற்று | வேர் |
| கேள்வி | நேரம் | வேடன் |
| கேசவன் | பேன் | கீழே |
| ஙே | பேறு | உள்ளே |
| சேவல் | பேரன் | ப்ளேக் |
| சேவகன் | மேகம் | கற்றேன் |
| ஞே | மேற்கு | பதினேழு |
| கண்டேன் | தாயே | பின்னேரம் |
| கண்ணே | ரேக்ளா | சினேகிதன் |

1. வெட்டி வேர்.
2. தேன் கூடு.
3. சேவல் இறகு பளபளப்பு.
4. வேர்கள் பலவிதம் உண்டு.
5. ஆணிவேர் சல்லிவேர் முதலியன.
6. நல்லவருடன் சினேகம் செய்.



ஐந்துவிரல்



குடை



பூனை

| |
|---|
| ஐ |
| ை(14) கை ஙை சை ஞை டை தை நை பை மை யை ரை வை ழை றை |
| ை (4) ணை லை ளை னை |

| | | |
|---|---|---|
| ஐயர் | கழுதை | தலை |
| ஐப்பசி | ஆந்தை | வெற்றிலை |
| உலக்கை | நைவு | வைத்தியன் |
| பலகை | நைச்சியம் | வைகாசி |
| ஙை | அகப்பை | வாழை |
| பச்சை | கலப்பை | தழை |
| மீசை | மைக்கூடு | தவளை |
| ஞை | எருமை | வளையல் |
| வடை | மாயை | கறையான் |
| பாவாடை | சாயை | பாறை |
| மணை | குதிரை | தென்னை |
| திண்ணை | சர்க்கரை | யானை |

1. மைல் கல்.
2. எலி வளை.
3. கை காட்டி மரம்.
4. பூனை எலி பிடிக்கும்.
5. குதிரை வண்டி இழுக்கும்.
6. காக்கை மரத்தில் கூடு கட்டும்.



ஒட்டியாணம்



கொடி



பதினொன்று

| ஒ |
| --- |
| ொ 15 |
| கொ |
| ஙொ |
| சொ |
| ஞொ |
| டொ |
| தொ |
| நொ |
| பொ |
| மொ |
| யொ |
| ரொ |
| லொ |
| வொ |
| ழொ |
| ளொ |
| ொ 3 |
| ணொ |
| றொ |
| னொ |

| | | |
|---|---|---|
| ஒன்று | தொப்பி | யொ |
| ஒன்பது | தொட்டி | ரொட்டி |
| ஒட்டகம் | தொட்டில் | ரொக்கம் |
| கொக்கு | தொண்டி | கல்லொட்டர் |
| கொலுசு | நொங்கு | ஒவ்வொன்று |
| கொல்லை | நொச்சி | |
| ஙொ | பொத்தான் | ழொ |
| சொப்பு | பொன் | ளொ |
| சொறி | பொரி | மற்றொன்று |
| ஞொ | மொச்சை | வேறொன்று |
| டொ | மொட்டு | இன்னொன்று |
| ணொ | மொத்தம் | மின்னொளி |

1. துரை தொப்பி.
2. நொடி நேரம்.
3. பொன் வண்டு.
4. எவர்க்கும் தலை ஒன்று.
5. பத்தும் ஒன்றும் பதினொன்று.
6. தூங்கும்பொழுது சொப்பனம் காணலாம்.



ஓணான்



கோழி



பெற்றோர்

| ஓ |
|---|
| ோ 15 |
| கோ |
| ஙோ |
| சோ |
| ஞோ |
| டோ |
| தோ |
| நோ |
| போ |
| மோ |
| யோ |
| ரோ |
| லோ |
| வோ |
| ழோ |
| ளோ |
| ோ 3 |
| ணோ |
| றோ |
| னோ |

| | | |
|---|---|---|
| ஓலை | தட்டோடு | உரோமம் |
| ஓசை | கண்ணோய் | நீரோட்டம் |
| ஓமம் | தோண்டி | உலோகம் |
| கோலி | தோள் | ஆலோசனை |
| கோணி | நோய் | வருவோம் |
| கோடரி | நோன்பு | இழோர் |
| கோபம் | போளி | வெள்ளோலை |
| ஙோ | போர்வை | வெள்ளோந்தி |
| சோழி | மோதிரம் | கற்றோர் |
| சோறு | மோப்பம் | வென்றோர் |
| சோலை | யோசனை | தென்னோலை |
| ஞோ | பெரியோர் | வினோதம் |

1. ஐந்து ரூபாய் நோட்டு தா.
2. நாய் மோப்பம் பிடிக்கும்.
3. பெரியோரை யோசனை கேள்.
4. ஓடம் தண்ணீரில் போகும்.
5. எனக்குப் பொன் மோதிரம் உண்டு.
6. குழந்தை ஆணோ பெண்ணோ தெரியாது.



ஔடதம்



வௌவால்

| ஔ |
| --- |
| ௌ(18) |
| கௌ |
| ஙௌ |
| சௌ |
| ஞௌ |
| டௌ |
| ணௌ |
| தௌ |
| நௌ |
| பௌ |
| மௌ |
| யௌ |
| ரௌ |
| லௌ |
| வௌ |
| ழௌ |
| ளௌ |
| றௌ |
| னௌ |

| | | |
|---|---|---|
| ஔவையார் | தௌவுதல் | ழௌ |
| ஔவியம் | தௌகித்திரன் | ளௌ |
| ஔபாசனம் | ‡பௌர்ணிமி | றௌ |
| கௌரவம் | பௌத்திரன் | னௌ |
| கௌரி | மௌனம் | *ஙௌ |
| கௌசலை | யௌவனம் | †ஞௌ |
| *சௌக்கியம் | இரௌத்திரி | டௌ |
| சௌந்தரி | இலௌகீகம் | ணௌ |
| சௌரியம் | வௌவால் | ‡நௌ |
| † | | |

1. ஓமம் நல்ல ஔடதம்.

2. ஔவை நன்றாய்ப் படித்தவள்.

3. கௌளி சொல்லுக்குப் பலன் உண்டு.

4. பூனை குட்டிகளைக் கௌவிக்கொண்டு ஓடும்.

5. பௌர்ணிமி இரவு முழுச்சந்திரன் உண்டு.

6. நீ சௌக்கியமாய் இரு.

உயிர் மெய்

| அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ |
|---|---|---|---|---|---|---|
| க | கா | கி | கீ | கு | கூ | கெ |
| ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ | ஙெ |
| ச | சா | சி | சீ | சு | சூ | செ |
| ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ | ஞெ |
| ட | டா | டி | டீ | டு | டூ | டெ |
| ண | ணா | ணி | ணீ | ணு | ணூ | ணெ |
| த | தா | தி | தீ | து | தூ | தெ |
| ந | நா | நி | நீ | நு | நூ | நெ |
| ப | பா | பி | பீ | பு | பூ | பெ |
| ம | மா | மி | மீ | மு | மூ | மெ |
| ய | யா | யி | யீ | யு | யூ | யெ |
| ர | ரா | ரி | ரீ | ரு | ரூ | ரெ |
| ல | லா | லி | லீ | லு | லூ | லெ |
| வ | வா | வி | வீ | வு | வூ | வெ |
| ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ | ழெ |
| ள | ளா | ளி | ளீ | ளு | ளூ | ளெ |
| ற | றா | றி | றீ | று | றூ | றெ |
| ன | னா | னி | னீ | னு | னூ | னெ |

எழுத்துக்கள்.

| ஏ | ஐ | ஒ | ஓ | ஔ | ஃ |
|---|---|---|---|---|---|
| கே | கை | கொ | கோ | கௌ | க் |
| ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ | ங் |
| சே | சை | சொ | சோ | சௌ | ச் |
| ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ | ஞ் |
| டே | டை | டொ | டோ | டௌ | ட் |
| ணே | ணை | ணொ | ணோ | ணௌ | ண் |
| தே | தை | தொ | தோ | தௌ | த் |
| நே | நை | நொ | நோ | நௌ | ந் |
| பே | பை | பொ | போ | பௌ | ப் |
| மே | மை | மொ | மோ | மௌ | ம் |
| யே | யை | யொ | யோ | யௌ | ய் |
| ரே | ரை | ரொ | ரோ | ரௌ | ர் |
| லே | லை | லொ | லோ | லௌ | ல் |
| வே | வை | வொ | வோ | வௌ | வ் |
| ழே | ழை | ழொ | ழோ | ழௌ | ழ் |
| ளே | ளை | ளொ | ளோ | ளௌ | ள் |
| றே | றை | றொ | றோ | றௌ | ற் |
| னே | னை | னொ | னோ | னௌ | ன் |

## பாலர்கள் கவனிக்க வேண்டியவை.

1. அதிகாலையில் எழுந்திரு.
2. கடவுளை நினைத்துக் கும்பிடு.
3. பல் விளக்கி முகம் கழுவு.
4. கை கால்களையும் சுத்தம் செய்.
5. பெரியோர்கள் சொல்வதைக் கேள்.
6. உபாத்தியாயர், தாய், தகப்பன், பெரியோர்கள்.
7. அண்ணனும் அக்காளும் பெரியோர்தான்.
8. பெரியோர்களிடம் மரியாதையாய்ப் பேசு.
9. நல்ல பிள்ளைகளுடன் சினேகம் செய்.
10. எப்பொழுதும் உண்மையே பேச விரும்பு.



ஜமீன்தார்

| | | |
|---|---|---|
| ஜனவரி | ஜுரம் | மேஜை |
| ரோஜா | ஜூன் | ஜொ |
| ஜில்லா | ஜெயம் | ஜோடி |
| ஜீரகம் | ஜேணம் | ஜௌ |

1. இவர் ஆண்டிப்பட்டி ஜமீன்தார்.
2. இவர் பெயர் பெத்தாச்சி செட்டியார்.
3. இவர் மிகவும் நல்லவர்; வெகு சமர்த்தர்.
4. இவர் ராஜ அன்பு உள்ளவர்.
5. ஏழைகளுக்கு அன்னம் அளிப்பவர்.
6. இவரைக் கடவுள் காப்பாற்றுவாராக.



## ரோஜா புஷ்பம்

| | | |
|---|---|---|
| வருஷம் | விஷ | பாஷை |
| கஷாயம் | ஷு | ஷொ |
| ரிஷி | ஷெ | ஷோ |
| ஷீ | அபிஷேகம் | ஷௌ |

1. இது ஒரு ரோஜா புஷ்பம்.
2. இது செடியில் உண்டாகும்.
3. மல்லிகைப்பூவும் செடியில் உண்டாகும்.
4. சண்பகப்பூ மரத்தில் உண்டாகும்.
5. சம்பங்கி கொடியில் உண்டாகும்.
6. தாமரைப்பூ ஜலத்தில் உண்டாகும்.



## ஸரஸ்வதி

| | | |
|---|---|---|
| டிஸம்பர் | கொலுஸு | ஸைகிள் |
| பைஸா | ஸூர்யன் | ஸொ |
| ஸிம்லா | ஸெப்டம்பர் | ஸோடா |
| ஸீதை | ஸேது | ஸௌம்ய |

1. ஸிம்லா என்பது ஒரு பட்டணம்.
2. ஸூர்யன் கிழக்கில் உதிக்கும்.
3. ஸூர்யன் மேற்கில் அஸ்தமிக்கும்.
4. ஸைகிள் என்பது இரண்டு சக்கர கால்வண்டி.
5. ஸௌம்ய என்பது தமிழ் வருஷம்.
6. ஸேது என்பது புண்ய தீர்த்தம்.



ஹாரம்

| | |
|---|---|
| விவாஹம் | ஹெட்மாஸ்டர் |
| ஹாரம் | ஹேவிளம்பி |
| டெல்ஹி | ஹைஸ்கூல் |
| பலஹீனம் | ஹொ |
| ஹுமாயூன் | ஸஹோதரர் |
| முஹூர்த்தம் | டல்ஹௌஸி |

1. விவாஹ முஹூர்த்தப் பத்திரிகை.
2. நம் தேசத்தின் முக்கிய பட்டணம் டெல்ஹி.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஜ | ஜா | ஜி | ஜீ | ஜு | ஜூ | ஜெ |
| ஷ | ஷா | ஷி | ஷீ | ஷு | ஷூ | ஷெ |
| ஸ | ஸா | ஸி | ஸீ | ஸு | ஸூ | ஸெ |
| ஹ | ஹா | ஹி | ஹீ | ஹு | ஹூ | ஹெ |
| க்ஷ | க்ஷா | க்ஷி | க்ஷீ | க்ஷு | க்ஷூ | க்ஷெ |



லக்ஷ்மி

| | | |
|---|---|---|
| பக்ஷணம் | க்ஷு | திராக்ஷை |
| க்ஷாமம் | க்ஷூ | க்ஷொ |
| பக்ஷி | க்ஷெ | க்ஷோ |
| க்ஷீரம் | க்ஷேமம் | க்ஷௌரம் |

1. அம்மா! பக்ஷணம் தா.
2. வீட்டில் எல்லோரும் க்ஷேமம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஜே | ஜை | ஜொ | ஜோ | ஜௌ | ஜ் |
| ஷே | ஷை | ஷொ | ஷோ | ஷௌ | ஷ் |
| ஸே | ஸை | ஸொ | ஸோ | ஸௌ | ஸ் |
| ஹே | ஹை | ஹொ | ஹோ | ஹௌ | ஹ் |
| க்ஷே | க்ஷை | க்ஷொ | க்ஷோ | க்ஷௌ | க்ஷ் |



## இராஜா.

1. இவர் நமது சக்கரவர்த்தி.
2. இவர் பெயர் ஐந்தாம் ஜார்ஜ்.
3. இவர் மிகவும் நல்லவர்.
4. இவர் நிரம்ப சமர்த்தர்.
5. இவர் நமக்கு நன்மையே செய்கிறார்.
6. இவர் நியாயம் தவறாதவர்.
7. இவர் பிதா எட்வர்ட் மஹாராஜா.
8. இவர் பாட்டியார் விக்டோரியா மஹாராணி.
9. இவர்களின் படங்கள் நாணயங்களில் உண்டு.
10. நமது இராஜாவைக் கடவுள் காப்பாற்றுவாராக.

*Copies can be had of—*

1. **Messrs. C. Coomaraswami Naidu and Sons,**
*Book-sellers, Madras.*

2. **Mr. O. C. Somasundara Mudaliar,**
*Book-seller, Saidapet (Madras.)*

இப்புத்தகம் அடியிற்கண்ட விலாஸதார்களிடம் பெற்றுக்கொள்ளலாம்:—

1. மெஸ்ஸர்ஸ். ஸி. குமாரஸ்வாமி நாயுடு
அண்டு ஸன்ஸ்,
புத்தக வியாபாரம்,
மதராஸ்.

2. மிஸ்டர். ஒ. ஸி. ஸோமசுந்தர முதலியார்,
புத்தக வியாபாரம்,
சைதாப்பேட்டை. (மதராஸ்.)

[குறிப்பு:— தபாற்கூலி பிரத்தியேகம். ஏககாலத்தில் 10 புத்தகங்கள் வாங்குபவர்களுக்கு ஒரு புத்தகம் இனமாகக் கொடுக்கப் படும்.]

Thompson & Co., Printers, Madras.